நகராட்சி அலுவலகம்,
சிவகாசி.

ந.க.எண்: 2568/2020/இ1

நாள்: 01.02.2021

## முக்கிய அறிவிப்பு

சிவகாசி நகராட்சியில் சிறப்புச் சாலைகள் திட்டம் 2020-2021-ன் கீழ் நகர் பகுதிகளில் உள்ள தார்ச்சாலைகளை மேம்படுத்தும் பணிக்கு அரசு ஆணை எண்.125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை, நாள்-13.11.2020 மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர், அவர்களின் 16.12.2020-ந் தேதிய ந.க.20557/2020/இ3 எண் கடித நிர்வாக அனுமதியின் படியும், 18.01.2020 அன்று இவ்வலுவலக ந.க.எண்.2568/2020/இ1 நாள்- 23.12.2020 எண் கடிதம் மூலம் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கைகளுக்கு எதிராக திரு.M.நாகராஜன், த/பெ.S.மாரிமுத்து, செங்கமலநாச்சியார்புரம், சிவகாசி என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம், மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் W.P.(MD) 543/2021-ல் (1) ஆணையாளர்,சிவகாசி நகராட்சி, (2) நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை மற்றும் (3) அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,சென்னை ஆகியோர்களை பிரதிவாதிகளாக்கி வழக்கு தொடரப்பட்டு 11.01.2021-ம் தேதி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் விசாரணைக்கு வரப்பெற்று, இடைக்கால தடை உத்தரவு வழங்கப்பட்டு, அதற்கான ஒப்பந்தப்புள்ளி 18.01.2021 அன்று பெறப்பட்டு நீதிமன்ற உத்திரவு வரும் வரை முடிவு செய்யப்படாது என அறிவிப்பு வெளியிடப்பட்டது. தற்போது மேற்படி வழக்கு W.P.(MD) 543/2021 மனுதாரரால் வாபஸ் பெற்ற நிலையில் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம், மதுரை கிளையின் 01.02.2021-ந் தேதியில் வழக்கினை தள்ளுபடி செய்து உத்திரவிடப்பட்டுள்ளது.

எனவே மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம், மதுரை கிளை வழக்கு எண் W.P.(MD) 543/2021 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதால் 18.01.2021 அன்று பெறப்பட்ட சிறப்பு சாலைகள் திட்டம்-2020-2021-க்கான ஒப்பந்தப்புள்ளிகள் வரும் 02.02.2021 அன்று மாலை 3.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து திறக்கப்பட உள்ளதால், அதுசமயம் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட அனைத்து ஒப்பந்ததாரர்களும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஆணையாளர் (பொ)
சிவகாசி நகராட்சி
1.2.2021